கூடுதல் தலைமைச் செயலர்/
ஆணையர் (வ.வ.)
4 ஜூலை 2016
எழிலகம், சென்னை–600 005

5/7
ADC (PR)

**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – **"முத்தின கத்திரிக்கா"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு கோரிக்கை நிராகரித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

**அரசாணை (டி) எண். 232**

**நாள்: 01.07.2016**
**துர்முகி, ஆனி 17,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. கூடுதல் தலைமைச் செயலர் /வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/14570/2016, நாள் 21.06.2016 தேர்வுக்குழு எண்.17/2016–2017.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. கூடுதல் தலைமைச் செயலர் / வணிகவரி ஆணையர், மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு **"முத்தின கத்திரிக்கா"** திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஏழு உறுப்பினர்களும் **"முத்தின கத்திரிக்கா"** என்ற திரைப்படம் கேளிக்கை விலக்கு அளிப்பதற்கு தகுதியானது அல்ல என பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. **"முத்தின கத்திரிக்கா"** தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :–

| வ. எண். | உறுப்பினர் திருவாளர்கள் | பரிந்துரை |
|---|---|---|
| 1. | S.M. சரஸ்வதி,<br>இணை ஆணையர்<br>(செயலாக்கம்),<br>(இடை மாநில புலனாய்வுக்குழு)<br>சென்னை 6 | திரைப்படத்தின் பெயர் தமிழில் உள்ளது. 'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம்.<br>இருப்பினும், இன்றைய அரசியலை மையப்படுத்தி இத்திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. அரசியல், அரசியல் கட்சித் தலைவர்கள், தொண்டர்கள், மக்கள் என எல்லாத் தரப்பினரையும் விமர்சித்து |

| | | |
|---|---|---|
| | | காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலையும் அதன் செயல்பாடுகளையும் நகைச்சுவை என்ற பெயரில் அநாகரீகமான முறையில் விமர்சிக்கப்பட்டுள்ளது. இந்தப்படத்தின் கருவும், கருத்துக்களும் தமிழ் பண்பாட்டிற்கும் நாகரீகத்திற்கும் உட்பட்டு காட்சிப்படுத்தப்படவில்லை. மேலும், அரசாணையில் குறிப்பிட்டது போல், இப்படம் தமிழ்ப் பண்பாடு மற்றும் நாகரீகத்திற்கு மேன்மையூட்டக் கூடிய எவ்வித பங்களிப்பையும் செய்யவில்லை. எனவே அரசாணையின் நிபந்தனைகளுக்கு உட்படவில்லை என்ற காரணத்திற்காக, **கேளிக்கை வரி விலக்கு அளிக்க இப்படம் தகுதியானது அல்ல என பரிந்துரை செய்கிறேன்.** |
| 2. | க. அன்னை,<br>துணைச் செயலாளர்,<br>தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தித்துறை | இத்திரைப்படத்திற்கு 'U' சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இத்திரைப்படத்தின் தலைப்பு தமிழில் உள்ளது. திரைப்படத்தில் பிற மொழி கலப்பில்லை. திரைப்படத்தில் ஆபாசங்கள் அதிக அளவில் இல்லையென்றாலும், தாயையும் மகளையும் இணைத்து கொச்சப்படுத்தி பேசப்பட்டுள்ளது. அரசியல் சார்ந்த விஷயங்கள் கொச்சைப்படுத்தப்பட்டு காட்டப்படுகிறது. அரசாணையின் நிபந்தனைகளுக்கு உட்படாததால் **கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என பரிந்துரைக்கிறேன்.** |
| 3. | முனைவர். கோ. விசயராகவன்,<br>இயக்குநர்<br>உலக ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ் வளர்ச்சி இயக்ககம்,<br>சென்னை 8 | மக்களுக்காக இயங்கும் அரசியல் அமைப்புகளையும் – அதன் சார்ந்த சமூக செயற்பாடுகளையும் முறையற்ற வகையில் விமர்சித்திருப்பது அரசாணையின் நிபந்தனையை நிறைவேற்றவில்லையென்பதால் **கேளிக்கை வரி விலக்கிற்கு இப்படம் தகுதியானது அல்ல.** |
| 4. | பாபு என்கின்ற<br>N.V. அனந்தகிருஷ்ணன்,<br>ஒளிப்பதிவாளர் | 'U' சான்றிதழ் பெற்ற படம். வன்முறை, ஆபாசம் இல்லை. தலைப்பு தமிழில் உள்ளது. தமிழ் பிரச்சனை ஏதும் இல்லை. ஆனால் அரசியல், அரசியல்வாதி அரசியல் சார்ந்த விஷயங்கள் பற்றி கொச்சை படுத்தப்பட்டு காண்பிக்கப்பட்டு உள்ளது. அரசாணையின் நிபந்தனைக்கு உட்படாததால் **கேளிக்கை வரி விலக்கிற்கு தகுதியானது அல்ல என்று பரிந்துரைக்கிறேன்.** |
| 5. | ராம்ஜீ,<br>பத்திரிகையாளர் | 'முத்தின கத்திரிக்கா' தமிழில் தலைப்பு. 'U' சர்டிபிகேட். பெரும்பாலான காட்சிகள் – வசனம் தமிழில் என்றாலும், ஆபாசமில்லை, வன்முறை இல்லை என்றாலும்,<br><br>1. ஆகா.. ஒகோ.. எலக்ஷனு கல்லா கட்டும் கலெக்ஷனு, நாறிப் போச்சு நம்ம நேஷனு... சேரத்துல பூசணிக்கா மறைக்கும் தடியனுங்க, ஒட்டுப் போடும் மக்கள் மடையனுங்க– |

| | | |
|---|---|---|
| | | முழுப் பாட்டுமே, அரசியல் காட்சிகளையும், மக்களையும், கொச்சைப்படுத்தி கேவலப்படுத்துகிறது – நையாண்டி என்றதன் பேரில்.<br><br>2. அரசியலில் போட்டியிட்டு தோற்ற நிர்வாகிகளை 'புட்டுக்கிறான் நட்டுக்கிறான்..' என்று பின்னணி குரல் ஒலிக்க அறிமுகப்படுத்துவது.<br><br>3. 'அல்பப்பய எம்.எல்.ஏ' என்று விமர்சிப்பது.<br><br>4. எல்லாக் கட்சிக்காரனுமே கமிஷன் வாங்குறான் கூட்டுற ஆயாவே கலாய்க்கிற மாதிரி போயிடுச்சு கட்சி என்று கிண்டலடிப்பது.<br><br>5. பச்சக்கலரு – ஆளும் கட்சி, மஞ்சள் கலரு – எதிர் கட்சி – போடற சால்வைக்கு இத்தனை இத்தனை பணம்னு கணக்கு – கேலி பேசும் வசனம்.<br>சமூக நலக்கூடத்தில் கட்சித் தலைவன் ஒரு பெண்ணுடன் உல்லாசம்.<br><br>6. 'கவர் குடுய்யா போர்றோம்' என்று போராட்டத்தை படம் பிடித்து செய்தி சேகரிக்கும் ஊடகங்களை காயப்படுத்தும் கண்ணியக் குறைவு.<br>7. 'கட்சிக் கொடிய போர்த்தினா இவனும் பிச்சைக்காரன் மாதிரிதான் இருப்பான்..' என்று போலீஸ் அதிகாரியை தரக் குறைவாகக் கிண்டலடிப்பது.<br><br>8. இதெல்லாம் கல்யாணத்துக்கப்புறம் வெச்சுக்கலாம்னு.. பசங்க எவனாது சொல்றானா, டீக்கடை பெண்ணிடம் காமெடியன் கேள்வி.<br><br>9. 'நாயே, பொற வாங்கிப் போடடேன், கண்ட எடத்துலே வாய் வெச்சுக் கடிக்கற..' வேட்டியை தூக்கிக் காட்டி நாயகன், நாயிடம் கத்துவது.<br><br>10. 'பொண்ணு மிஸ்ஸானாலும் அம்மா இருக்கு.. மாமியாரை ரைட் வுடலாம்' என்று நாயகனுக்கு காமெடியன் பதில்.<br>11. 'பத்து கீப்பை (keep) வெச்சுக்க வேண்டிய வயசுல ஒரு கீப்பை வெச்சிருக்க..' சிங்கம், புலி. (அரசியல் தலைவன்) யிடம் காமெடியன் நக்கலடிப்பது.<br><br>12. 'அந்த மந்திரி பதவில வருமானமே வராது. ஆதான் வேணாம்னுட்டேன்.' நாயகன் பதில்<br>இப்படி காட்சிகள் பலவும்.<br>பண்பாடு, அரசியல் நாகரீகத்துக்கு உகந்ததாயில்லை அரசியல் கட்சி + தலைவர்களை தரக்குறைவாக கொச்சைப்படுத்துவதால், **வரி விலக்குக்கு தகுதியில்லை என்று பரிந்துரைக்கிறேன்.** |
| 6. | L.R. ஈஸ்வரி,<br>பின்னணிப் பாடகி | திரைப்படத்தின் பெயர் தமிழில் உள்ளது. 'U' சான்றிதழ் பெற்றது. ஆபாசம், வன்முறை சில இடங்களில் வசனத்தில் உள்ளது. மகளையும் தாயையும் கொச்சையாக பார்ப்பதும், பேசுவதும் ஆபாசமாக |

| | | |
|---|---|---|
| | | உள்ளது. **இந்த படத்தை வரி விலக்கு அளிக்க வேண்டாம் என்று பரிந்துரைக்கிறேன்.** |
| 7. | M.N. ராஜம்,<br>பழம்பெரும் நடிகை | தமிழ் பெயர் கொண்ட படம். 'U' சான்றிதழ் பெற்றது. வன்முறை இல்லை. ஆபாசம் சில இடங்களில் வசனத்தில் உள்ளது. தாய், மகள், இருவரையும் காதலியாக பார்ப்பது, வர்ணிப்பது அருவருப்பதாக உள்ளது. **வரி விலக்கு அளிக்க தகுதியான படம் அல்ல. வரி விலக்கு அளிக்க வேண்டாம்.** |

4. **"முத்தின கத்திரிக்கா"** தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட ஏழு உறுப்பினர்களும் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிப்பதற்கு பரிந்துரை செய்யவில்லை என்பதாலும், அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதி வரையறைகளை இத்திரைப்படம் பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் **"முத்தின கத்திரிக்கா"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்க இயலாது என அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முனைவர் ச.சந்திரமௌலி,
கூடுதல் தலைமைச் செயலாளர் (முகூபொ)

<u>பெறுநர்</u>
கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்
நகல்:
சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி (ம) பதிவு) அலுவலகம், சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

1/7/2016

பிரிவு அலுவலர்.

1.7.16